பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 06 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியின இளைஞர்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. இந்திய — நேபாள இருதரப்பு உறவுகளில் மூன்றாவது நாட்டின் தலையீடு தேவையில்லை என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

3. அகஸ்திய மலைப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை விரைந்து அகற்ற கேரளம் மற்றும் தமிழக அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. எல்-நினோ தாக்கம் காரணமாக இவ்வாண்டு உலகம் முழுவதும் வெப்பம் அதிகரிக்கும் என்று உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

பழங்குடியின இளைஞர்களை மேம்படுத்தவும், அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யவும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், கல்வி உதவித்தொகையை படிப்பதற்கான நிதியுதவியாக மட்டும் கருதாமல், இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் ஆயுதமாக தாம் கருதுவதாக குறிப்பிட்டார்.

புதிய வாய்ப்புகளை அடைவதற்கான கதவுகளை கல்வி உதவித்தொகை திறந்துவிடுவதாகவும் அவர் கூறினார்.

வளமான அறிவாற்றலுடன் திகழும் பழங்குடியின இளைஞர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு இது உதவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்கால இந்தியாவை பிரகாசமாக ஒளிரச்செய்வதற்கான வலிமையை இளைய சமுதாயத்தினர் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர்கள் குறிப்பாக பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் தாங்கள் பிறந்த இடத்தையும், மக்களையும் என்றும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

நேபாளத்தின் தேசிய சுதந்திர கட்சியின் தலைவர் **Rabi Lamichhana** மற்றும் அவர் தலைமையில் புதுதில்லி வந்துள்ள தூதுக்குழுவினரை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக, டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா — நேபாளம் இடையிலான ஒத்துழைப்பு, இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட விஷயங்கள் குறித்து பேசியதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்திய — நேபாள இருதரப்பு உறவுகளில் மூன்றாவது நாட்டின் தலையீட்டிற்கு வாய்ப்பில்லை என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இந்திய —

நேபாள எல்லைப்பகுதி குறித்து, நேபாள பிரதமர் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக, அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் எவ்வித சர்ச்சையும் இல்லை என்று தெரிவித்தார்.

இந்திய — நேபாள எல்லை தொடர்பான **98** சதவீத சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாகவும், சில பிரச்சினைகளுக்கு சுமூகமாக இருதரப்பு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாணப்படும் என்றும் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தான் — ஐரோப்பிய யூனியன் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துகளை இந்தியா மறுப்பதாகவும் அவர் கூறினார்.

ஜம்மு, காஷ்மீர், லடாக் ஆகியவை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

புதுதில்லி வந்துள்ள ஜெர்மனி **Thuringia** மாகாணத்தின் அமைச்சர் **Mario Voigt**, இன்று அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை சந்தித்து, நவீன தகவல் தொடர்பு, **photonics** உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப பரிமாற்றங்கள் குறித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது பேசிய டாக்டர் ஜிதேந்திர சிங், உலகின் மூன்றாவது பெரிய புத்தாக்க தொழில் கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

உயிரி தொழில்நுட்பம், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு, விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் சர்வதேச அளவில் கூட்டு முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவும், ஜெர்மனியும் அறிவியல் தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளில் நீண்டகால தொடர்பை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழிலக மேம்பாட்டில் புதிய வாய்ப்புகள் இந்தியாவில் உள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நான்கு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மியான்மர் அதிபர் **U Min Aung** இன்று மும்பை சென்றுள்ளார்.

சத்ரபதி சிவாஜி விமான நிலையத்தில் மகாராஷ்ட்ரா ஆளுநர் திரு **Jishnu Dev Varma,** மாநில அமைச்சர் திரு ஜெயக்குமார் ராவல் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

மும்பையில் தொழில் அதிபர்களை சந்தித்து முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து மியான்மர் அதிபர் ஆலோசனை நடத்த உள்ளார்.

மும்பை மக்கள் மாளிகையில் நடைபெறும் சிறப்புநிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

குடியுரிமை மற்றும் விசா விதிகளில் மத்திய அரசு மாற்றம் செய்துள்ளது.

இதன்படி, 180 நாள் விசா அனுமதியுடன் இந்தியா வரும் வெளிநாட்டவர், கூடுதலாக தங்கியிருக்க வேண்டுமெனில், விசா காலம் முடியும் முன்னரே விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

180 நாட்களுக்குப்பின் அசாதாரண சூழ்நிலையில் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக ஆன்லைன் மூலம் மேல்முறையீட்டுக் கோரிக்கையை தாக்கல் செய்யவும் புதிய விதிகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பாதுகாக்கப்பட்ட அகஸ்திய மலைப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை குறித்த காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கேரளம் மற்றும் தமிழகம் அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மலைப்பகுதியை ஆக்கிரமித்துள்ள 118 அரசு அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் மீது ஒழுங்கு மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை பிறப்பித்த நீதிபதிகள் திரு விக்ராம் நாத், திரு சந்தீப் மேத்தா ஆகியோர் கொண்ட அமர்வு ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றம் இதுதொடர்பாக பிறப்பித்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை என்றும், முன்னுரிமை அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஆக்கிரமிப்பை அகற்றும் திட்டத்துடன், சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அகஸ்திய மலைப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

எல்-நினோவின் தாக்கம் உலகம் முழுவதும் இவ்வாண்டு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

இம்மாதம் தொடங்கி, ஆகஸ்ட் மாதம் வரை இதன் தாக்கம் 80 சதவீதம் இருக்கும் என்றும், நவம்பர் மாத இறுதிவரையிலும் இந்த தாக்கம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பசிபிக் பகுதியில் வீசும் கடும் சூறாவளி காற்று காரணமாக வெப்பநிலை அதிகரிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பருவமழையும் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பருத்தி மீதான இறக்குமதி வரிக்கு மத்திய அரசு ஐந்து மாதம் விலக்கு அளித்திருப்பது ஜவுளித்துறைக்கு உத்வேகம் அளித்துள்ளது.

கோவையில் செயல்படும் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம், இந்த அறிவிப்பை வெளியிட்டதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய நிதியமைச்சர் திருமதி நிரமலா சீதாராமன், வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்த வரிவிலக்கு பருத்தி பருவமில்லாத காலத்தில் பஞ்சு பற்றாக்குறையையும், தரமான பஞ்சு தேவையையும் பூர்த்தி செய்யும் என்று தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத் தலைவர் திரு துரை பழனிசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — துரை பழனிசாமி — 34 Sec. )*

<<<<<<>>>>>>

கடந்த மாதத்தில் **U P I** மூலம் **2** கோடியே **32** லட்சம் பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதி சேவைகள் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள சமூக வலைதள பதிவில், **U P I** தொடங்கப்பட்ட பத்தாண்டுகளில் உலகின் மிகப்பெரிய பணப்பரிவர்த்தனை தளமாக இது உருவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த **2016-**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **11-**ஆம் தேதி தொடங்கப்பட்ட **U P I** திட்டத்தின்மூலம், உலகில் சுமார் **50** சதவீத மின்னணு பணப்பரிவர்த்தனைகள் **U P I** மூலம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மின்னணு பொருளாதார கட்டமைப்பின் ஆதாரமாக **U P I** விளங்குவதாகவும், நிகழ்நேர பணப்பரிவர்த்தனையை இதுஉறுதி செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா **-** இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான **3**வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Taunton-**ல் இப்போட்டி இரவு **11** மணிக்கு தொடங்குகிறது.

------------

இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Hariharan Amsakarunan — Arjun** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-18, 21-10** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Nur Mohd Azriyn - Wee Kiong Tan** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>>**